**07.07.2026**

STC.No. 349/2017 திரு. ராஜேந்திரன் த/பெ. நடேசன் DW2

**குறுக்கு விசாரணை (புகார்தாரர் தரப்பில்)**

நானும், இவ்வழக்கின் புகார்தாரரும் வரதராஜன் என்பவருக்கு பணம் கொடுத்ததாக சொல்லியுள்ள நிலையில் அந்த வரதராஜன் என்பவர் என் மூலமாக புகார்தாரருக்கு பழக்கமா அல்லது புகார்தாரர் மூலமாக எனக்கு பழக்கமா என்றால் என் மூலமாக தான் புகார்தாரருக்கு பழக்கம். நான் சொல்லி தான் புகார்தாரர் வரதராஜனிடம் பணம் கொடுத்தார் என்றால் சரிதான். வரதராஜனிடம் புகார்தாரர் கொடுத்த பணத்திற்காகத் தான் நான் இந்த வழக்கு காசோலையை புகார்தாரரிடம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் தான் வழக்கு காசோலையை புகார்தாரரிடம் கொடுத்தேன் என்றாலும் தற்போது வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் இந்த வழக்கு காசோலை என்னுடைய சொந்த வேலையாக SBI (ADB) வங்கிக்கு வந்தபோது, டீக்கடையில் டீ குடித்துவிட்டு வந்து பார்த்தபோது காணாமல் போய்விட்டதாக சொல்லியுள்ள நிலையில் அன்றைய தினம் மொத்தம் எத்தனை காசோலைகள் காணாமல் போனது என்றால் காசோலை புத்தகத்தில் இருந்த 49 காசோலைகள் காணாமல் போய்விட்டது. நான் காசோலைகள் காணாமல் போனது குறித்து வங்கி மேலாளரிடம் எழுதி கொடுத்த குறிப்பை இந்த வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. நான் வங்கி மேலாளரிடம் Stop payment குறிப்பு எதுவும் கொடுக்கவில்லை என்றாலும், அவ்வாறு நான் கொடுத்திருந்தால் வழக்கு காசோலையானது Payment stopped by drawer என்ற குறிப்புடன் திருப்பப்பட்டிருக்கும்

என்றாலும், அவ்வாறு கொடுக்காத காரணத்தினால் தான் Funds insufficient என்ற குறிப்புடன் வழக்கு காசோலை திருப்பப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. காணாமல் போன 49 காசோலைகளில் நான் எத்தனை காசோலைகளில் கையொப்பம் செய்திருந்தேன் என்றால் 1 காசோலையில் மட்டும் கையொப்பம் செய்திருந்தேன். காசோலை காணாமல் போனது குறித்து நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரில் நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. காசோலை காணாமல் போனது குறித்து நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் நகலை இந்த வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. புகார்தாரர் வழக்கு காசோலையை வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்த பிறகு நான் அவர் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. புகார்தாரர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு எதுவும் அனுப்பினேனா என்றால் இல்லை. வழக்கறிஞர் அறிவிப்பு பெற்ற பின்னர் நான் புகார்தாரரை நேரடியாக சந்தித்து பேசினேன். நான் 16.09.2017 அன்று புகார்தாரருக்கு பதில் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். நான் புகார்தாரருக்கு பதில் அறிவிப்பு அனுப்பிவிட்டு தற்போது பதில் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த பதில் அறிவிப்பில் உள்ள விவரங்களை வழக்கில் சொன்னால் எனது தரப்பு கட்சிக்கு பாதகம் ஏற்படும் என்பதால் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தான் வழக்கு காசோலையை புகார்தாரரிடம் கொடுத்தேன் என்றாலும், தற்போது வழக்கிற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் புகார்தாருக்கு சட்டப்படியாக நிறைவேற்றக்கூடிய கடனை கொடுக்க கடமைப்பட்டவர்

என்றால் சரியல்ல. நான் புகார்தாரரிடம் பெற்ற கடனுக்காக வழக்கு காசோலையை கொடுத்து அவரை மோசடி செய்ததால் நான் தண்டிக்கப்பட வேண்டிய நபர் என்றால் சரியல்ல.

ஒப்பம்/–சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/

ARUNACHALAM

Digitally signed by ARUNACHALAM
Date: 2026.07.07 17:52:35 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி